# கஹடகஸ்திகிலிய பிரதேச சபை

# அனுராதபுரம் மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மே 03 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 ஏப்ரல் 05 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 யூலை 09 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, கஹடகஸ்திகிலிய பிரதேச சபை 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கஹடகஸ்திகிலிய பிரதேச சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டின் போது நன்கொடையாகக் கிடைத்த ரூபா 433,465 கூட்டுத்தொகையான நூலகப் புத்தகங்களின் பெறுமதி மற்றும் மேலும் அலுவலக உபகரணங்களின் 20 விடயங்களின் பெறுமதியிடப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிராததுடன் மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 55,200 பெறுமதியான இயந்திர உபகரணங்கள் மீண்டெழும் செலவினமாகக் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து கடனாகப் பெறப்பட்ட ரூபா 4,282,862 தொகை கடன் பணமாக கணக்கு வைக்கப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்ட வட்டி மற்றும் கடன் தவணைகளின் கூட்டுத்தொகையான ரூபா 773,532 தொகை பிழையாக மூலதனச் செலவின விடயத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் கிடைக்கவேண்டிய நீதிமன்ற தண்டப்பண வருமானம் ரூபா 788,993 ஆக இருந்ததுடன் பட்டோலைகள்/அறிக்கைகளின் பிரகாரம் அந்த மீதி ரூபா 517,739 ஆக இருந்தது.

### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 19,946,919 கூட்டுத்தொகையான 05 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,024,538 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 182,202 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 609 | 796 | 425 |
| (ii) | வாடகை | 349 | 3,492 | 207 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 956 | 844 | 43 |
| (iv) | ஏனைய வருமானம் | 628 | 5,435 | 1,021 |

### 2.2.2 ஆதன வரி

2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 425,412 தொகையான நிலுவை மீதியை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 941,300 ஆக இருந்ததுடன் அத்திகதியில் உள்ளவாறு கிடைக்கவேண்டிய நீதிமன்ற தண்டப்பண வருமானம் தீர்மானிக்கப்பட்டு கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

## 2.3 செயற்பாடற்ற மற்றும் குறைவாக பயன்படுத்தப்பட்ட பௌதீக வளங்கள்

அரிசிமாவை அண்மித்த பேக்கரி உற்பத்திகளை மேம்படுத்துவதற்காக 2008 ஆம் ஆண்டின் போது சபைக்குக் கிடைத்த ரூபா 541,000 பெறுமதியான உபகரணங்கள் மற்றும் அவற்றை ஸ்தாபிப்பதற்காக கட்டிடத்தை பழுதுபார்ப்பதற்கு ரூபா 297,719 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் எவ்வித உற்பத்திச் செயற்பாடுகளும் ஆரம்பிக்கப்படாமல் உரிய உபகரணம் செயற்பாடற்றுக் காணப்பட்டது.

## 2.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

(அ) மீளாய்வாண்டின் போது 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 19(1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரம் பெறப்படாமல் 15 பதவிகளுக்காக நிரந்தர பதவியணியினர் சேர்க்கப்பட்டு ரூபா 2,076,501 தொகை சம்பளம் மற்றும் படிகளாக சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) எதிர்வரும் வருடங்களின் செயற்பாடுகளுக்குரிய திட்டங்களை உள்ளடக்கி கூட்டிணைந்த திட்டமும் செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கான செயல் நடவடிக்கைத் திட்டமும் தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

சபை நிதியத்தைப் பயன்படுத்தி கூட்டுத்தொகை ரூபா 105,860 பெறுமதியான மண்வெட்டிகள் மற்றும் பிளாஸ்டிக் கதிரைகள் என்பன கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் அந்தப் பொருட்கள் பகிர்ந்தளிக்கப்பட்ட முறை கணக்காய்விற்கு விளக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்